Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 8 / 2022

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | குமார் | Calling: | Chief Pharmacist |
| Father's / Husband's Name: | ராஜகோபால் | Religion: | |
| Village: | செட்டியப்பனூர் | Age: | 59 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 01.08.2025

(எதிரி ஆஜர்.)

பு.சா. 1 குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

நான் வருமானவரிசெலுத்துபவரா என்றால் ஆமாம். நான் கொடுக்கல் வாங்கலுக்கு கணக்கு வைத்துள்ளேன் என்றால் சரிதான். பாலாஜிக்கு எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 04.01.2021ல் நான் ரூ.20,00,000/- கொடுத்தேன். மேற்படி பணம் வருமான வரி கணக்கில் வருகிறதா என்றால் இல்லை, நான் நகையை வைத்து கொடுத்தேன். நகை யாருடையது என்றால் என் மனைவியுடையது. நான் நகை வைத்துகொடுத்ததாக சொல்லும் பணத்திற்கான ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ அல்லது தனிபிராதிலோ, முதன்மை சாட்சியத்திலோ மேற்படி விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி விவரங்களை குறிப்பிடாததற்கு காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான் மேற்படி என் மனைவி நகையை வைத்ததற்கான ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை. அதற்கான காரணம் என்னவென்றால் நான் 11

மாதத்திற்கு ஒரு முறை அந்த நகைகளை மாற்றி வைப்பதால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது. 04.01.2021ம் தேதிக்கு முன்பு நகை வைத்ததற்கான ரசீதுகளை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. எதிரிக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ரூ.20,00,000/—எந்தெந்த தேதிகளில் கொடுத்தேன் என கூறமுடியுமா என்றால் முடியாது, எவ்வளவு ரூபாய் எந்தெந்த தேதியில் கொடுத்தேன் என்று சொல்ல முடியுமா என்றால் அதுவும் சொல்ல முடியாது. எதிரியின் தாயார் கலாவதி என்னுடன் மருத்துவ துறையில் வேலை செய்தார் என்றால் சரிதான்.

நான் எந்த வகையான சீட்டு நடத்துகிறேன் என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. எதிரி அனுப்பிய பதிலறிவிப்பில் என்னென்ன சங்கதிகள் குறிப்பிட்டு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு நினைவில்லை. ரூ.20,00,000/—ற்கு என்ன வகையான புரோநோட் கொடுத்தார் என்றால் ஒரு ரூபாய் பிரிண்டெட் செய்த முத்திரை தாள் கொண்ட புரோநோட். அதில் ஒரு ரூபாய் வில்லை ஒட்டப்பட்டிருந்தது. அந்த புரோநோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். மேற்படி புரோநோட் என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். ரூ.8,00,000/—ற்கான காசோலை எப்போது எதிரி என்னிடம் கொடுத்தார் என்றால் 07.06.2021ம் தேதி. என்னுடைய முதன்மை சாட்சியத்திலும், தனி பிராதிலும் ரூ.20,00,000/—ற்கு புரோநோட் என்னிடம் உள்ளது என்றும், அதன் பின்னிட்டு மேற்கண்ட தேதியில் ரூ.8,00,000/—ற்கான காசோலை கொடுத்தார் என்றும் கூறியுள்ளேனா என்றால் இல்லை. 04.01.2021ம் தேதி கொடுத்த புரோநோட்டை குறித்து இன்றைய தேதி வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் செக் கொடுத்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி ரூ.20,00,000/—ற்கான வட்டியை மாதத்திற்கு ரூ.40,000/—வீதம் சுமார் 4 மாதம் கொடுத்தார். மேற்படி விவரத்தை முதன்மை சாட்சியத்திலும், தனிபிராதிலும் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் கூறவில்லை என்றால் சரிதான்.

என் மனைவி நகைகளை எந்த வங்கியில் வைத்தேன் என்றால் பாரத ஸ்டேட் வங்கி. நான் ஏற்கனவே 13.12.2023ம் தேதி குறுக்கு விசாரணை செய்யும் சமயத்தில் நடராஜனிடம் வாங்கிக்கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளது சரியா என்றால் சரிதான். நான் ஏற்கனவே சாட்சியமளித்தது படி நடராஜனிடம் வாங்கிக்கொடுத்த பணத்திற்காக என்

மனைவி நகையை அடகு வைத்து கொடுத்தேன் என்று தற்போது சாட்சியமளிக்கிறேன். மேற்படி விவரங்களை குறித்தும் முதன்மைசாட்சியத்திலும், தனிபிராதிலும் கூறவில்லை என்றால் சரிதான். நான் ஏற்கனவே ரூ.20,00,000/–ற்கான புரோநோட்டை வைத்துக்கொண்டு ஏற்கனவே சீட்டு எடுக்கும் சமயத்தில் செக்யூரிட்டிக்காக கொடுக்கப்பட்ட காசோலைகளை வைத்து தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் சீட்டு நடத்தவில்லை. என்னிடம் சீட்டு போட்ட நபர்களை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்க ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். ஏற்கனவே எதிரியும், அவரது தாயாரும் தனியாகவும், கூட்டாகவும் காசோலைகளை கொடுத்து அதன்பேரில் தாக்கல் செய்த வழக்குகள் விவரம் குறிப்பிடாமல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் பொய்யான ஆவணங்களை குறிப்பிட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. நான் வங்கியில் நகைகளை அடகு வைத்தது எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் கடந்த 2021ம் ஆண்டு முதல் அடகில் உள்ளது. மேற்படி விவரம் குறித்து வங்கிக்கு சம்மன் சார்பு செய்து விசாரிப்பதில் ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) குமார்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.08.04 10:19:53 +0530